DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW –1** பாஷா |
| Father's Name | அல்லா பாஷா |
| Village | அணையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 22.02.2023

( Accused Present)

முதல் விசாரணை

**நான் அனையேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அனையேரியில் பங்க்கடை வைத்துள்ளேன். என் மகன் பெயர் பாரூக் . 11.09.2021 அன்று என் மகன் பாரூக் அனையேரி கவுன்சிலர் ரவி என்பவரிடம் வேலை செய்து கொண்டிருந்தார். அன்றைய தினம் அனையேரி மாதாகோவில் அருகே கால்வாய் அமைக்கும் பணியை என் மகன் பாரூக் வேலை வாங்கி கொண்டிருந்தார். அப்போது ஐயப்பன் என்பவர் வந்து என்மகனிடம் சிமெண்ட் தருமாறு கேட்டுள்ளார். அதற்கு என் மகன் இது கவுன்சிலர் வேலை என்றும் அவர் வந்தால் தான் கேட்டு தரமுடியும் என்றும் சொன்னார். அதற்கு மேற்படி ஐயப்பன் சிமெண்ட்டை கொடுடா என்று சொல்லி என் மகனை தகாத வார்த்தைகளால் பேசி கீழே கிடந்த இரும்பு ராடை எடுத்து என் மகனை அடித்துள்ளார். அதை என் மகன் கையால் தடுத்துள்ளார். பின்னர் கீழே கிடந்த மரகட்டையை எடுத்து ஐயப்பன் என் மகன் பாரூக் தலையில் அடித்துள்ளார். அதனால் என் மகன் மயக்கமாகி கீழே விழுந்துள்ளார். அதனால் அங்கியிருந்தவர்கள் என் மகனை முதல் சிகிச்சைக்காக அனந்தபுரம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்து உள்ளார்கள். அதன் பிறகு செஞ்சி அரசு மருத்துவமனைக்கும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கும் அழைத்து சென்றுள்ளார்கள். நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று**

என் மகனை பார்த்தேன். அவர் பேச முடியாத நிலையில் இருந்தார். அவருக்கு தலையில் காயம் இருந்தது. இது சம்பந்தமாக அனந்தபுரம் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். **என்னிடம் காண்பிக்கப்படுவது தான் நான் கொடுத்த புகார் ஆகும். அது அ.சா.ஆ. 1/அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. சம்பவத்தை நேரடியாக யார் பார்த்தார்கள் என்று என்னிடம் காண்பிக்கப்படும் நான் கொடுத்த புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக பார்த்த சாட்சிகளின் பெயரை குறிப்பிட்டு ஒரு பஹகார் கொடுத்தேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து நான் புகார் கொடுத்தேன். சம்பவத்தை பற்றி அங்கியிருந்தவர்களிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேன். அங்கியிருந்தவர்கள் யார் என்று என்னுடைய புகாரிலும், போலிசு விசாரணையிலும் சொல்லவில்லை. என் மகன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் மகன் 3 நாட்கள் நினைவு இல்லாமல் மருத்துவமனையில் இருந்தார். அதன் பிறகு பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். என் மகனுடன் நான் ஒரு நாள் மருத்துவமனையில் இருந்தேன். அதன் பிறகு என் மனைவி உடன் இருந்தார். பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு என் மகனை என் மனைவி தான் அழைத்து சென்றார். என் மகன் பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு அவரை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என் மகன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலும், பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனையிலும் மொத்தம் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார்.

II என் மகன் வேலை பார்த்த ரவி தி.மு.க . கட்சி கவுன்சிலர் ஆவார். அரசாங்க ஒப்பந்தத்தின் அடிப்படையில் கால்வாய் கட்டும் வேலை நடந்தது. கால்வாய் கட்டும் வேலையை நன்றாக செய்யுமாறு எதிரி சொன்னதால் என் மகன் தான் எதிரியை அடித்து விட்டார் என்றால் சரியல்ல. என் மகன் அடித்ததால் ஏற்பட்ட காயத்திற்கு எதிரி செஞ்சீ அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பொய்யான புகார் கொடுத்தேன் என்றாலும், நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அடித்ததால் என் மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லுவது உண்மை இல்லை என்றாலும், என் மகன் எதிரியை அடிக்கும் போது தவறி விழுந்து அவருக்கு

காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. செஞ்சி அரசு மருத்துவமனையில் என் மகன் சிகிச்சையில் இருந்த போது போலிசார் வந்து என் மகனின் புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் கவுன்சிலர் ரவி யிடம் சொன்னதற்கு தான் காவல் நிலையத்திற்கு போன் மூலம் சொல்லுவதாகவும், அதன் பிறகு 5 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் தான் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 2** பாரூக் |
| Father's Name | பாஷா |
| Village | அனையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 22.02.2023

(Accused Present)

முதல் விசாரணை

நான் அனையேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அனையேரி கிராமத்தில் முன்னாள் கவுன்சிலர் ரவி என்பவரிடம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா. 1 பாஷா என் அப்பா ஆவார். 11.09.2021 ம் தேதி அனையேரி கிராமத்தில் கால்வாய் அமைக்கும் பணியில் நான் மேற்பார்வை செய்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் பகல் 11.30 மணிக்கு ஆஜர் எதிரி வந்து என்னிடம் சிமெண்ட் கேட்டார். நான் எடுத்துக் கொள்ளுமாறு சொன்னேன். பின்னர் எதிரி சென்று விட்டார். அதன் பிறகு சுமார் 1 மணிக்கு ஒரு மூட்டை சிமெண்ட் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் சிமெண்ட் என்னுடையது இல்லைஎன்றும் தலைவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். பிறகு நான் போய்விட்டேன். கொஞ்ச தூரம் சென்ற பிறகு எதிரி என்னை கூப்பிட்டு முதலில் என் கன்னத்தில் அடித்துவிட்டார். பின்னர் எதிரி இரும்பு ராடால் அடிக்க வந்தார். அதை தடுத்த போது கிழே விழுந்து விட்டது. பின்னர் எதிரி மரகட்டையை எடுத்து என் தலையில் அடித்துவிட்டார். அதனால் நான் மயக்கம் போட்டு கிழே விழுந்து விட்டேன். பிறகு அங்கியிருந்தவர்கள் என்னை அழைத்து கொண்டு அனந்தபுரம் அரசு

மருத்துவமனைக்கு சென்றார்கள். அங்கியிருந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் அங்கியிருந்து பாண்டிசேரி ஜிப்மர்மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவத்தின் போது நடராஜன், பிரேமா, ஏழுமலை ஆகியோரும் மற்றும் வேலை செய்தவர்களும் இருந்தார்கள். இது சம்பந்தமாக போலிசில் என் அப்பா புகார் கொடுத்தார். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எம்.காம் வரை படித்துள்ளேன். எதிரி என்னிடம் சிமெண்ட் கேட்ட போது நேரம் பகல் 11.30 மணி இருக்கும். போலிசார் விசாரணையில் எதிரி சிமெண்ட் கேட்ட போது எடுத்து செல்லுமாறு சொன்னேன் என்று கூறியுள்ளேன். அனையேரியிலிருந்து செஞ்சி அரசு மருத்துவமனை சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் வருவதற்கு சுமார் அரை மணிநேரம் ஆகும். செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நான் வரும் போது என்ன நேரம் இருக்கும் என்று ஞாபகம் இல்லை. சுமார் 2 மணி இருக்கும். செஞ்சி அரசு மருத்துவமனயில் நான் இருந்த போது அனந்தபுரம் போலிசார் வந்து 11.09.2021 அன்று என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 11.09.2021 அன்று இரவு சுமார் 10 மணி வரை இருந்தேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கவுன்சிலர் ரவி, என் அம்மா, சங்கர் ஆகியோர் என்னை அழைத்து சென்றார்கள். ஏழுமலை என்பவர் என்னை அழைத்து செல்லவில்லை.

அன்றைய தினம் இரவில் செஞ்சி வந்து என் தாத்தா வீட்டில் தங்கியிருந்தேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மேற்கண்ட 3 நபர்கள் தவிர வேறு யாரும் வந்து என்னை பார்க்கவில்லை. மறுநாள் காலை 9 மணிக்கு நானும், என் அப்பாவும் புகார் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்து விட்டு பாண்டிசேரி ஜிப்மர்மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது 12.09.2021 போலிசார் வழக்கு சம்பந்தமா களன்னை விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. நான் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்த போது எதிரியும் சிகிச்சைக்காக வந்தார். ரவி என்பவர் ஏற்கனவே கவுன்சிலராகவும், தற்போது தலைவராகபும் உள்ளார். அவர் ஆளும்காட்சியை சேர்ந்தவர். நான் மேற்பார்வை செய்து கொண்டிருந்த வேலை அரசு வேலை என்றால் சரிதான். எதிரி அரசு கால்வாய் கட்டும் வேலையை ஒழுங்காக செய்யவேண்டும் என்று சொன்னதால் நான் கோப பட்டு எதிரியை அடித்துவிட்டேன் என்றாலும், அந்த தகவலை கவுன்சிலர் ரவிக்கு நான் சொல்லிய போது எதிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து என் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்றும், அதனால் நான் வேலைக்கு செல்லமுடியாது என்பதால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No.8 /2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW –3** ஏழுமலை |
| Father's Name | ரவி |
| Village | அனையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 22.02.2023

(Accused Present)

<u>முதல் விசாரணை</u>

நான் அனையேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1, பாஷா, அ.சா.2 பாரூக் ஆகியோரை தெரியும். அ. சா.2 பாரூக் என்னுடன் வேலை செய்து வருகிறார். நானும், அ.சா.2 பாரூக் என்பவரும் முன்னாள் கவுன்சிலர் ரவி என்பவரிடம் வேலை செய்து வருகிறோம். 11.09.2021 ம் தேதி அனையேரி கிராமம், அந்தோணியா கோவில்தெருவில் கால்வாய் கட்டுவதற்காக சென்ட்ரிங் வேலை செய்து கொண்டிருந்தேன். பிரேமா, நடராஜன், ஆகியோரும் மற்றும் பலரும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அ.சா.2 பாரூக் மேல்பார்வை செய்து கொண்டிருந்தார். அப்போது பகல் 1 மணிக்கு எதிரி ஐயப்பன் வந்து பாரூக்யிடம் சிமெண்ட் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கு பாரூக் கவுன்சிலர் ரவியிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த போது எதிரி ஐயப்பன் இரும்பு ராடை எடுத்து பாரூக் மீது அடித்தார். அதை தடுத்த பின்பு ஐயப்பன் மரக்கட்டையை எடுத்து பாரூக் மீது தலையில் அடித்தார். அதனால் அவருக்கு தலையில் பட்டு ரத்தம் வந்தது.

பின்னர் நான் பாரூக்கை அனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு பாரூக் அப்பா மற்றும் சிலர் வந்தார்கள். நான் அங்கியிருந்து வீட்டிற்கு சென்று விட்டேன். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

நான் அனையேரி கிராமத்தில் பம்பு ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். எனக்கு தற்போது தலைவராக உள்ள ரவி என்பவர் சம்பளம் வழங்குவார். எதிரியும் , அ.சா.2 பாரூக்கும் பேசிகொண்டிருந்த இடத்தில் இருந்து நான் சுமார் 100 அடி தூரத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அ.சா. 2 யிடம் எதிரி 11.30 மணிக்கு பேசி கொண்டிருந்ததை நான் பார்க்கவில்லை. எதிரி, அ.சா.2 யை அடிக்கும் போது நான் மறிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு அ.சா. 1 மற்றும் அவரின் மனைவி , உறவினர்கள் வந்துவிட்டார்கள். செஞ்சி அரசு மருத்துவமனையில் பாரூக்கை சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். வேறு எங்கும் செல்லவில்லை. எதிரி சம்பவ தினத்தன்று 11.30 மணிக்கு கால்வாய்யை நல்லவிதமாக கட்டுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அந்த தகவலை கவுன்சிலர் ரவிக்கு நாங்கள் சொன்ன போது எதிரி வந்தால் அடியுங்கள் என்று சொன்னதால் நானும், பாரூக் ஆகியோர் சேர்ந்து எதிரியை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரியை அடித்து காயபடுத்தியது சம்பந்தமாக கொடுத்தபுகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரி பாரூக்கை அடித்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.